பக்கங்கள்: 06

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2053 தை 09 வெள்ளிக்கிழமை 22.01.2022 கதிர் 305

## துஷ்மந்த எம்.பிக்கும் கொரோனாத் தொற்று



ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் கேகாலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாரதீ துஷ் மந்தவுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி யாகியுள்ளது. ☞ 2

## அங்கொடைக்கு மாற்றப்பட்டார் வீரசேகர



கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டு நாரஹேன்பிட்டி பொலிஸ் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த பொதுமக்கள் பாது காப்பு அமைச்சர் சரத் வீரசேகர அங்கொடையிலுள்ள தேசிய தொற்று நோய் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இதனைத் தேசிய தொற்று நோய்கள் நிறுவகத்தின் வைத்தியர் ஆனந்த விஜேவிக்ரம உறுதிப்படுத்தியுள்ளார்.

அமைச்சர் சரத் வீரசேகரவின் உடல்நிலை தற்போது சீராக இருக்கின் றது எனவும் வைத்தியசாலை வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன

## நாலக்க கோட்டேகொடவுக்கும் கொரோனாத் தொற்று உறுதி



ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் மாத்தளை மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் நாலக்க கோட்டேகொடவுக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகி யுள்ளது.

அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி. ஆர் பரிசோதனையில் தொற்று உறுதி யாகியுள்ளது. இதையடுத்து அவர் தனிமைப்படுத்தப்பட் டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சர்மிளா ராஜபக்ஷ திடீர் இராஜிநாமா



நாசவேலைகள் மற்றும் மோசடிகளில் ஈடுபட்டவர்கள் தொடர்பில்உரியவிசாரணை கள் மேற்கொள்ளப்பட்டு தற் போதைய ஆபத்தான நிலை மையை நீக்கும் வரை தான் சேவையில் இருந்து விலகி இருப்பதாக விலங்கியல் திணைக்ணகளத்தின்பணிப் பாளர் நாயகம் ☞ 2

# ஹிட்லர் ஆட்சியே நாட்டுக்கு தேவை

### சந்திரசேன கூறுகின்றார்; கோட்டாவுக்கும் புகழாரம்



**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சிறந்த ஜனநாய கத் தலைவர். அவர் ஹிட்லர்போல் செயற்பட்டமை கிடையாது. ஆனாலும், தற்போதைய சூழ்நிலையில் நாட்டை ஆட்சி செய்ய 'ஹிட்லர்' ஆட்சிதான் வேண் டும்.**

**- இவ்வாறு அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன தெரி வித்தார்.** ☞ 2

## கோட்டாவுக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்குவோம்

### மஹா சங்கத்தினர் கோரிக்கை



பொறுமையுடனும் நன்கு திட்டமிடப்பட்ட வகையிலும் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் பிரதிபலன்கள் தற்போது யதார்த்த மாகி வருகின்றன. தொலைநோக்குப் பார்வையும் நடைமுறைச் சிந்தனையும் கொண்ட தலைவராக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மீது நம்பிக்கை வைத்து, மக்களின் அபிலாகைளை நிறைவேற்ற ஒன்றிணைவது அனைத்துத் தரப்பினரினதும் பொறுப்பு என மஹா சங்கத்தினர் சுட்டிக்காட்டினர். ☞ 2

## அரசியல் தீர்வுக்கு தென்கொரியா ஒத்துழைப்பு வழங்க வேண்டும்!

### சார்ள்ஸ் எம். பி. கோரிக்கை



தமிழ் மக்களுக்கு கௌரவமானதொரு அர சியல் தீர்வை வழங்குமாறு இலங்கை அரசுக்கு, தென்கொரியா அரசு ஆலோசனை வழங்க வேண்டும்என்றுதமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் கோரிக்கை விடுத்தார்.

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள தென்கொரிய சபாநாயகர் நேற்று நாடாளுமன்றத் துக்கு வருகை தந்தார். சபை நடவடிக்கைகளை யும் கண்காணித்தார்.

இந்நிலையில் இலங்கை நாடாளுமன்றத் துக்கு வருகை தந்த தென்கொரிய சபாநாயகரை வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் சார்பில் வரவேற் பதாகவும், அம்மக்களின் சார்பில் வாழ்த்துகளை தெரிவிப்பதாகவும் சார்ள்ஸ் எம்.பி. குறிப்பிட்டார்.

அத்துடன், இலங்கையில் வாழும் தமிழ் மக் களுக்கு அரசியல் தீர்வை பெற்றுக்கொடுக்கும் விடயத்தில் தென்கொரிய அரசும் தலையிட வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.

இலங்கையின் அபிவிருத்திக்கு ☞ 2

## யாழ். சர்வதேச வர்த்தக சந்தையின் 2ஆம் நாள்



(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தக சந்தை 12 ஆவது தடவையாக இன்று காலை 10 மணியளவில் யாழ்ப்பாணம் முற்றவெளியில் சம்பிரதாயபூர்வ மாக வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, இலங்கைக்கான தாய்லாந்து தூதுவர் ☞ 2

## யாழில் கஞ்சாவுடன் தம்பதியினர் கைது!



(எஸ்.நிதர்ஷன்)

கஞ்சா போதைப்பொருளை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் யாழ்., சுழிபுரத்தைச் சேர்ந்த தம்பதியர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட் சகரின் கீழான மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவும் கடற்படை யும் இணைந்து நேற்று நடத்திய ☞ 2

## அரசியல் தீர்வுக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தென்கொரியா ஒத்துழைப்புகளை வழங்கி வருகின்றது. பலர் அந்நாட்டில் வேலை செய்கின்றனர். எனவே, இலங்கையில் அனைத்து இன மக்களும் சம உரிமையுடன் வாழ்வதற்கும், தமிழ் மக்களுக்குஅரசியல்தீர்வைமுன்வைப்பதற்கும் இலங்கை அரசுக்கு ஆலோசனை வழங்குமாறு தென்கொரிய சபாநாயகரிடம் கேட்டுக்கொள்கின்றேன் எனவும் தமதுரையில் சார்ள்ஸ் எம்.பி. மேலும் குறிப்பிட்டார்.

## யாழ். சர்வதேச ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஹார்ன்போல் மற்றும் தொழில்சார் பிரதிநிதிகள் ஆகியோரால் திறந்துவைக்கப்பட்டது.

இந்த வர்த்தக சந்தை எதிர்வரும் 23ஆம் திகதி வரை காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை இடம்பெறவுள்ளது.

சிறிய மற்றும் நடுத்தரத் தொழில் முயற்சியாளர்கள் தங்கள் உற்பத்திகளை வடக்கு மக்களுக்கு அறிமுகப்படுத்துவதற்கான களமாக இந்தக் கண்காட்சி அமைந்துள்ளது.

விவசாயம், கல்வி, உணவு, தொழில்கள், இயந்திரங்கள், கட்டுமானம், நுகர்வோர், மின்னியல் மற்றும் தொழில்கள், தயாரிப்புகள் மற்றும் சேவைகளைக் கொண்ட பல வர்த்தக விடயமாக இது அமைந்துள்ளது.

அத்துடன், கண்காட்சியைப் பார்வையிட பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், நிறுவன ஊழியர்கள், பொதுமக்கள், நலன்விரும்பிகள் என அனைவரும் கலந்துகொண்டுள்ளனர்.

நேற்று யாழ்ப்பாணம் வர்த்தக கைத்தொழில் மன்றத்தின் தலைவர் நந்தரூபன் மற்றும் விக்னேஷ் ஆகியோரின் பங்கேற்புடன் எல்.ஈ.சி.எஸ். நிறுவனத்தின் தலைவர் அர்ஜுன தர்மதாஸ தலைமையில் வர்த்தக சந்தை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதற்கு யாழ்ப்பாணம் வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனத்துடன் இணைந்து எல்.ஈ.சி.எஸ். நிகழ்வை ஏற்பாடு செய்துள்ள நிலையில் சர்வதேச வர்த்தக மன்றம், கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு மற்றும் யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகம் ஆகியன இதற்கு அங்கீகாரம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## யாழில் கஞ்சாவுடன் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தேடுதல் நடவடிக்கையில் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

மூன்று உரப்பைகளில் பொதியிடப்பட்ட நிலையில் சுமார் 85 கிலோ கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சுழிபுரம் பறாளை பகுதியில் உள்ள வீட்டுவளாகத்திலிருந்து கஞ்சா போதைப் பொருள் கைப்பற்றப்பட்ட நிலையில் 36 வயதுடைய கணவரும் அவருடைய மனைவியும்கைதுசெய்யப்பட்டனர் எனவும் பொலிஸார் கூறினர்.

## கோட்டாவுக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற பௌத்த ஆலோசனை சபையின்12ஆவது கூட்டத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

கொரோனாத் தொற்றிலிருந்து மக்களை மீட்டெடுக்கவும் சவால்கள் மற்றும் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கும், ஜனாதிபதியின் பங்களிப்பைப் பாராட்டிய மஹா சங்கத்தினர் பௌத்த ஆலோசனைச் சபையில் தமது கருத்துக்களைத் தெரிவித்தனர்.

அதலபாதாளத்துக்கு சென்றுகொண்டிருந்த நாட்டையும் தேசத்தையும், பாரம்பரியத்தையும் காப்பாற்றக் கூடிய ஒரே தலைவர் என்ற வகையில் கோட்டாபய ராஜபக்ச மீது வைத்திருந்த நம்பிக்கை வீணாகவில்லை எனவும், கூரகலை புனிதபிரதேசம், முஹூது மஹாவிஹாரை உள்ளிட்ட வடக்கு, கிழக்கில் உள்ள விஹாரைகளைப் பாதுகாத்து, நாட்டுக்கு உரிமையாக்குவதற்கு கடந்த இரண்டு வருடங்களில் ஜனாதிபதி மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும் என, மஹா சங்கத்தினர் சுட்டிக்காட்டினர்.

அதேபோன்று, நாட்டு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலான உண்மைத்தகவல்களை வழங்குவதும் தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதில் ஜனாதிபதிக்கு ஒத்துழைப்பு வழங்குவதும், பௌத்த ஆலோசனைச் சபையின் பொறுப்பாகும் என்றும் மஹா சங்கத்தினர் குறிப்பிட்டனர்.

சட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்களை நிறைவேற்றுவதற்கு மஹா சங்கத்தினரின் வழிகாட்டலை எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டார். அழியும் தருவாயில் இருந்த சிங்கள பௌத்த பாரம்பரியத்தை கொவிட் தடைகளுக்கு மத்தியிலும் பாதுகாத்து, பெரும்பான்மை மக்களின் அபிலாஷைகள் நிறைவேற்றப்பட்டதைப் போன்று, அந்த வரலாற்றுச் சிறப்புமிக்கத் தலங்களை அபிவிருத்தி செய்வதற்கு தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

பௌத்த ஆலோசனை சபையின் மஹா சங்கத்தினர், இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத், ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க, அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் அரச அதிகாரிகள் ஆகியோர் இதன்போது கலந்துகொண்டிருந்தனர்.

## சர்மிளா ராஜபக்ஷ ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சர்மிளா ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் செயலாளர் மற்றும் வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கு எழுதியுள்ள கடிதத்தின் மூலம் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

14 நாள்களுக்குள் விசாரணை நடத்தி தன் கடமையைச் செய்வதற்கு ஏற்ற சூழலை உருவாக்க வேண்டும் என்று குறித்த கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

இல்லை எனில் தாம் பதவி விலகுவதாகவும் சர்மிளா ராஜபக்ஷவின் அந்தக் கடிதத்தில்மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஹிட்லர் ஆட்சியே ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

நாட்டில் பல்வேறு பிரச்சினைகள் உருவாகியுள்ளன என்பது உண்மை தான். விலைவாசியும் அதிகரித்துள்ளது. அத்தியாவசியப் பொருள்களுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது. இதனால் பல சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. இதனை நாம் மறுக்கவில்லை. இவற்றுக்கு தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கின்றது. அதனை நாம் செய்வோம். அதற்கான திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. பெப்ரவரி 3ஆம் திகதிக்கு பிறகு திட்டங்கள் துரிதப்படுத்தப்படும். சகல மக்களையும் இணைத்துக்கொண்டு பொருளாதார சவால்களை வெற்றிகொள்வோம்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக இன்று விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டாலும், சமூக வலைத்தளங்களில் விமர்சித்தாலும் ஜனாதிபதி திறமையான அதேபோல் சிறந்த தலைவர் என்பது எமக்குத் தெரியும். அவர் எப்போதும் ஜனநாயகத்தை பாதுகாக்கின்றார். ஹிட்லர் போல செயற்படுகிறார் எனக் கூறப்பட்டாலும் அவர் சிறந்த ஜனநாயகத் தலைவர். நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் நாட்டை ஆட்சி செய்ய ஹிட்லர்தான் வேண்டும். ஏனெனில் தொழிற்சங்கங்கள் நாட்டை குழப்பிக்கொண்டு உள்ளன - என்றார்.

## துஷ்மந்த எம்.பிக்கும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவருக்கு நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் தொற்று உறுதியாகியுள்ளது. இதையடுத்து அவர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். அவருடன் தொடர்பைப் பேணியவர்களைக் கண்டறியும் நடவடிக்கையில்சுகாதாரப்பிரிவினர்ஈடுபட்டுள்ளனர்.


## மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மண மக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் ‘காலைக்கதிர்’ சேவையைப் பெற்றுக்கொள்ள

**076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை – அதிகாலையும் மாலையும் – உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.









வாசகர்களின் நன்மதிப்பைப் பெற்ற பல்சுவை வார இதழ்

**செம்மண் 78 ஆவது இதழ்**

**வெளிவந்துவிட்டது வாசித்துவிட்டீர்களா?**



- ஜல்லிக்கட்டு என்கிற அன்பு கலந்த வீரம்
- வானூர்தியின் சக்கரம் தண்டவாளத்தில் தேயுமானளவுக்குத் தாழப் பறந்தேன்
- அச்சம் தரும் தமிழுர் பெருக்கம்
- கோவா வறை
- மனம் தொட்ட சினிமா
- குட்டி போடும் குட்டி ரோபோ...!

மேலும் பல சுவையான அம்சங்களுடன்
உங்கள் பிரதிகளுக்கு அழையுங்கள்
**076 443 8622**

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## உயர்ந்து செல்லும் விலைவாசி

**நாட்டின் விலைவாசி உயர்வுச் சிக்கல் இறக்கை கட்டிப் பறப்பதாக புள்ளிவிவரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

**ஒவ்வொரு மாதமும் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் பெருமளவு விலை உயர்வு அவதானிக்கப்படுகின்றது. இதனால் பணவீக்கமும் எகிறி வருகின்றது எனக் களமுனை புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன.**

**உணவுப் பொருள்களின் விலையேற்றம் முன்னைய நவம்பர் மாதத்தில் 17 வீதமாக இருந்தது. அது இப்போது டிசெம்பரில் 21.8 வீதமாக உயர்ந்துள்ளது**

**மொத்தப் பணவீக்கம் நவம்பரில் 11 வீதமாக இருந்தது. அது இப்போது 14 வீதமாக உயர்ந்துவிட்டது.**

**பணவீக்கம் மாதாந்த ரீதியில் இரட்டை இலக்கத்துக்கு வருவதே பெரிய பின்னடைவாக நோக்கப்பட்ட காலம் மலையேறிவிட்டது. இப்போது இரட்டை இலக்க வீத அதிகரிப்பில் இருந்தும் அது இரண்டு மடங்கு வேகத்தில் எகிறுவது நாட்டின் பொருளாதாரம் முட்டி மோதி முடங்கிப் போவதற்கான முன்னெச்சரிக்கைதான் என்கின்றனர் பொருளாதார வல்லுநர்கள்.**

**இதில் முக்கிய விடயம் என்னவென்றால் கொரோனாப் பாதிப்பின் பின்னர் உலகளாவிய ரீதியில் உணவு விலைகள் கணிசமாகக் குறைய, அதேசமயம் இலங்கையில் மட்டும் அது கண்மண் தெரியாமல் அதிகரித்திருக்கின்றது.**

**டிசெம்பரில் உலகளாவிய ரீதியில் உணவு விலைகள் குறைந்த போதிலும் இலங்கையில் பெரியளவில் விலைகள் அதிகரித்துள்ளன என உணவு, விவசாய நிறுவனம் (எவ்.ஏ.ஓ) தெரிவித்திருக்கின்றது.**

**பெரும்பாலும் மரக்கறி வகைகள், அரிசி, பச்சை மிளகாய் பெரிய வெங்காயம், கிழங்கு, முட்டை, பாண், தேங்காய், கோழி இறைச்சி, கோதுமை மா, பால்மா, பிஸ்கெட், சின்னவெங்காயம், மைசூர்பருப்பு, பழவகைகள், தேங்காய் எண்ணெய், மிளகாய்த்தூள், செத்தமிளகாய், குழந்தைகளுக்கான பால்மா போன்றவற்றில் முன்னெப்போதும் இல்லாத அதிகரிப்பு ஏற்பட்டிருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.**

**அதேபோல குடிவகைகள், சிகரெட், வெற்றிலை, உடுபுடைவைகள், வீடுகள், தண்ணீர், மின்சாரம், எரிவாயு, எரிபொருள், வீட்டுத்தளவாடங்கள், போக்குவரத்து, உணவகங்கள், ஹோட்டல்கல் போன்றவற்றுக்கான செலவினமும் பெருமளவில் அதிகரித்துள்ளது.**

**தொலைத்தொடர்பு மற்றும் கல்விக் கட்டணங்கள் போன்ற ஓரிரு துறைகளில் மட்டுமே பெரிய அதிகரிப்பு கடந்த மாதங்களில் காட்டப்படவில்லை என்று புள்ளிவிவரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

**ஒருபுறம் விலை அதிகரிப்பு, பணவீக்கம் என்று மக்கள் அல்லாட, யானைப் பசிக்கு சோளப் பொரி போட்ட மாதிரி சில நிவாரண அறிவிப்புக்களை நிதி அமைச்சரும் அவரது அரசுத் தரப்பினரும் வெளியியிடுகின்றனர்.**

**அரச ஊழியர்களுக்கும் ஒய்வூதியருக்கும் ஐயாயிரம் ரூபா மேலதிகக் கொடுப்பனவு, சமுர்த்திக் கொடுப்பனவு ஆயிரம் ரூபா உயர்வு, மருந்துகளுக்கான தீர்வை விலக்கு என்று அரசு அறிவித்த நிவாரணங்கள், எகிறும் விலைவாசி உயர்வு மற்றும் பணவீக்கத்துக்கு முன்னால் தாக்குப் பிடிக்கக் கூடிய விடயங்களே அல்ல.**

**உலக நாடுகளிடம் கையேந்தி, கடன் வாங்கிக் காலத்தைக் கடத்தும் இந்த அரசின் இராஜதந்திர தந்துரோபாயமும் நீண்ட காலத்துக்குச் சரிவராது என்பதால் நாட்டின் எதிர்காலம் கேள்விக் குறியாகவே உள்ளது.**

# இரு மாதங்களில் 20 பேருக்கு வவுனியா மாவட்டத்தில் டெங்கு!

## மக்களுக்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கை



வவுனியா மாவட்டத்தில் டிசெம்பர் மற்றும் தற்போது வரை 20 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மகேந்திரன் தெரிவித்துள்ளார்.

வவுனியா பெரியார்குளத்தில் நகர சபையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்–

பொதுவாகவே டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கையை சுகாதாரத் திணைக்களத்தாலேயே செய்ய வேண்டும் என்று எல்லோரும் எண்ணுகின்றனர். தற்போது நகரசபை இவ்வாறான நிகழ்வுகளை முன்னின்று செய்வது வரவேற்கத்தக்க விடயம். டெங்கு என்பது சுகாதாரப் பிரச்சினை மட்டுமல்ல இது ஒரு சமூகப் பிரச்சினையாகும்.

ஏனென்றால் நாங்கள் எங்களுடைய திண்மக் கழிவுகளை சரியான முறையில் மேற்கொள்ளாமையாலேயே டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகள் பெருகுகின்றன.

டெங்கு நோயைப் பரப்புகின்ற நுளம்புகளை நாங்கள் தடுப்பதன் மூலமே டெங்கு நோயைத் தடுக்க முடியும். மேலும் இதற்குரிய முயற்சியாகவே நகரசபைத் தலைவரால் ஒழுங்குசெய்யப்பட்ட நிகழ்வு நடைபெறுகின்றது. வவுனியா மாவட்டத்தைப் பொறுத்த வரை டெங்கு கட்டுப்பாட்டில் உள்ளது.

ஆனால், எமக்கு அண்மையில் உள்ள யாழ்.மாவட்டம் மற்றும் மன்னார் மாவட்டத்தில் டெங்கு நோய்த்தாக்கத்தின் வீரியம் அதிகமாகக் காணப்படுகின்றது. இவ்விரு மாவட்டங்களிலும் கடந்த வருட ஆரம்பத்தில் டெங்கு நோயாளர்களின் பெருக்கத்தை விட இந்த ஆண்டு ஆரம்பத்தில் மிக அதிகமாகக் காணப்படுகின்றது. இதேபோன்று திருகோணமலை மாவட்டத்திலும், அதேபோன்று கொழும்பு, கம்பஹா மாவட்டங்களிலும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை மிக அதிகமாக உள்ளது. குறிப்பாக மேற்கூறிய மாவட்டங்களுக்கு வவுனியா மாவட்ட மக்கள் பல்வேறு தேவைகளுக்காகச் சென்று வர வேண்டிய தேவையுள்ளது.

இவ்வாறு சென்று வருபவர்கள் மூலமாகவே வவுனியாவில் டெங்கு நோய் தொற்றாளர்களை அடையாளங்கண்டு உள்ளோம். கடந்த மாதத்தைப் பொறுத்த வரை வவுனியா மாவட்டத்தில் 09 பேரே டெங்கு நோய் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

2022 ஜனவரி மாதம் தற்போது வரை 11 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். மாதம் முடிவில் குறித்த எண்ணிக்கை அதிகரிக்கக் கூடிய சந்தர்ப்பம் உள்ளது என்றும் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.



# காசல்றி நீர்தேக்க கரையோர பகுதியில் காட்டுத் தீ பரவல்!

காசல்றி நீர்த்தேக்கக் கரையோரப் பகுதியில் ஏற்பட்ட காட்டுத்தீயால் இரண்டு ஏக்கர் காடு எரிந்து நாசமாகியது. மலையகத்தில் தொடரும் வறட்சி காலநிலையிலே நேற்று (வெள்ளிக்கிழமை) பிற்பகல் 2 மணியளவில் தீ பரவல் ஏற்பட்டுள்ளது.

காசல்றி நீர்தேக்கத்தில் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்துள்ள நிலையில் இனந்தெரியாதோரால் இவ்வாறு தீ வைக்கப்பட்டுள்ளது. ஹற்றன் பொலிஸ் பிரிவிக்கு உட்பட்ட ஹற்றன் நோட்டன் பிரதான வீதியின் காசல்றி நீர்த்தேக்க கரையோர பகுதியான சமர்வில் பகுதியில் தீ பரவல் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பெரும்போக நெல் அறுவடை வவுனியாவில் வீழ்ச்சி நிலை

அறுவடை பாரிய வீழ்ச்சி. ஏக்கருக்கு 5 மூடை அடிக்கும் அவலம். வவுனியாவில் பெரும்போக நெல் அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் ஒரு ஏக்கருக்கு 5 தொடக்கம் 7 மூடைகள் நெல்லே விளையும் அவலநிலை ஏற்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் கடந்த ஆண்டு சுமார் 50 ஆயிரம் ஏக்கருக்கும் மேல் பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. தற்போது அதன் அறுவடைக்காலம் நெருங்கியுள்ளதுடன் பல்வேறு பகுதிகளிலும் அறுவடை இடம்பெற்றுவருகின்றது.

இம்முறை நெல்லிற்கான பசளை இறக்குமதிக்கு அரசு தடை விதித்திருந்தமையால் நெற்செய்கைக்குத் தேவையான பசளை இல்லாமல் விளைச்சலில் கடுமையான வீழ்ச்சி ஏற்ப்பட்டுள்ளது.

குறிப்பாக கடந்த காலங்களில் ஏக்கருக்கு 30 மூடைகளுக்கு அதிகமாக விளைச்சல் கிடைத்தநிலையில் இம்முறை 5 தொடக்கம் 7 மூடை நெல்லே விழைந்துள்ளதாகக் கவலை தெரிவிக்கும் விவசாயிகள் தமது வாழ்வாதாரம் கடுமையாகக் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

இம்முறை பசளை இன்மை மற்றும் மருந்துப்பொருள்களின் விலை அதிகரிப்பு, ஏனைய செலவுகள் என ஓர் ஏக்கருக்கு 60 ஆயிரத்துக்கும் மேல் செலவளித்துள்ளோம். எனினும் 30 ஆயிரம் ரூபாவே வருமானமாகக் கிடைத்துள்ளது. இதனால் எமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதுடன், கடனாளிகளாக ஆக்கப்பட்டுளோம்.

எனவே, பசளை விடயத்தில் முன் ஆயத்தமின்றி அரசாங்கம் மேற்கொண்ட முடிவால் நாட்டின் முதுகெலும்பான விவசாயிகள் தற்கொலை செய்துகொள்ளும் அவலநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். எமக்கான நஸ்டத்தை ஈடுசெய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.



# ரஷ்யாவின் கோரிக்கைகளுக்கு அடுத்த வாரம் அமெரிக்கா பதில்!

ஐரோப்பாவில் நேட்டோ நிலைகள் குறித்த ரஷ்யாவின் கோரிக்கைகளுக்கு அடுத்த வாரம் எழுத்துபூர்வமாகப் பதிலளிக்க அமெரிக்கா ஒப்புக்கொண்டுள்ளது. சுவிசில் நடைபெற்ற உக்ரைன் தொடர்பான இரண்டாவது சுற்று பேச்சுக்குப் பிறகு ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் நேற்று வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

ரஷ்யாவின் வெளியுறவு அமைச்சர் தனது அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஆண்டனி பிளிங்கனுடன் இரண்டு மணிநேர கலந்துரையாடல் நடைபெற்றது. இந்தப் பேச்சுக்கள் ஆக்கபூர்வமானவை எனவும் பயனுள்ளது என்றும் ரஷ்யாவின் வெளியுறவு அமைச்சர் விவரித்தார்.

எவ்வாறாயினும், எழுத்துபூர்வமாகப் பதிலளிப்பதற்கான வாஷிங்டனின் வாக்குறுதியை நேர்மறையான நடவடிக்கையாக வகைப்படுத்த அவர் மறுத்துவிட்டார்.

நாம் சரியான பாதையில் செல்கிறோமா இல்லையா என்பதை என்னால் சொல்ல முடியாது. அமெரிக்க பதில்களைப் பெறும்போது பார்ப்போம், என்று அவர் மேலும் தகவல் வெளியிட்டுள்ளார்.

சுவிட்ஸர்லாந்தின் ஜெனீவாவில் உக்ரேனிய எல்லையில் ஏற்பட்ட நெருக்கடியைத் தணிக்க முற்பட்ட பேச்சுக்கள் சுவிஸ் நகரில் நடந்த முதல் சுற்று விவாதங்கள் சிறிதளவு பலனைத் தராமல் 11 நாள்களுக்குப் பிறகு நடைபெற்றது.

# 11 ஈராக்கியப் படையினர் ஐ.எஸ். தாக்குதலில் பலி!




ஈராக்கில் இஸ்லாமிய அரசு தவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 11 ஈராக்கியப் படையினர் கொல்லப்பட்டுள்ளனர்.

நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை 3 மணியளவில் தலைநகர் பக்தாத்தின் 120 கிலோமீற்றர் தொலைவில், வடக்கே தியாலா மாகாணத்தில் அல்-அசிம் மாவட்டத்தில் மலைப்பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாமை உடைத்துக்கொண்டு அங்கு உறங்க்கொண்டிருந்த படையினர் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அண்மைய மாதங்களில் ஈராக் இராணுவத்தைக் குறிவைத்து நடத்தப்பட்ட மிக மோசமான தாக்குதல்களில் ஒன்றாகும்.

இஸ்லாமிய அரசு குழு 2017 இல் நாட்டில் தோற்கடிக்கப்பட்டது. இருப்பினும் அது பல பகுதிகளில் ஸ்லீப்பர் செல்கள் மூலம் இயங்கி வருகின்றது.



# பிரிட்டிஷ் மின்சார கார் ஆலைக்கு அரசு நிதியுதவி!

பிரித்தானியாவில் மின்சார கார் பற்றிகளைப் பெருமளவில் தயாரிக்கத் திட்டமிடும் நிறுவனம், நார்தம்பர்லேண்டில் அதன் முன்மொழியப்பட்ட தொழிற்சாலைக்கு அரசாங்க நிதியைப் பெற்றுள்ளது.

பிரிட்டிஷ் வோல்ட், இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கம்போயிஸில் உள்ள ஜிகாஃபாக்டரிக்கான திட்டங்களை அறிவித்தது. இது 3 ஆயிரம் வேலைகளை உருவாக்கும் எனக் கூறப்பட்டது. இந்தநிலையில், அரசாங்கம், தனது வாகன மாற்ற நிதி மூலம் சுமார் 10 கோடி பவுண்டுகளை வழங்கியுள்ளது.

முதலீட்டாளர்களான ட்ரைடாக்ஸ் மற்றும் அபிர்டனின் ஆதரவையும் அறிவித்தது. இது தனியார் நிதியில் சுமார் 1.7 பில்லியன் பவுண்டுகளை வழங்குகின்றது.

இதுதொடர்பாக வணிகச் செயலர் குவாசி குவார்டெங் கூறுகையில், 'இது மறு தொழில்மயமாக்கல். நாங்கள் தொழில்துறையை கொண்டு வருகிறோம். வெளிப்படையாக முதலீடு செய்யப்படாத பகுதிக்கு உற்பத்தியைக் கொண்டு வருகிறோம்.

ஆயிரக்கணக்கான வேலைகளை நாங்கள் கொண்டு வருகிறோம். - எனக் கூறி னார்.

# கானாவில் வெடிமருந்துகளை ஏற்றிச்சென்ற ட்ரக் விபத்து! 17பேர் உயிரிழப்பு

மேற்கு கானாவில் சுரங்கத்தில் பயன்படுத்தப்படும் வெடிமருந்துகளை ஏற்றிச் சென்ற ட்ரக் வண்டி மீது மோட்டார் சைக்கிள் மீது மோதி வெடித்ததில் குறைந்தது 17 பேர் உயிரிழந்துள்ளனர் மற்றும் 59 பேர் காயமடைந்தனர்.

மேலும், 500 கட்டடங்கள் அழிக்கப்பட்டுள்ளன என தேசிய பேரிடர் மேலாண்மை அமைப்பின்துணைஇயக்குநர் ஜெனரல் செஜி சாஜி அமெடோனு தெரிவித்தார்.

நாட்டின்மேற்குப்பிராந்தியத்தில் உள்ள போகோசோ மற்றும் பாவ்டி நகரங்களுக்கு இடையே உள்ள அபியேட்டில் இந்த வெடிப்பு ஏற்பட்டது.

இந்த விபத்து சுரங்கத்திலிருந்து 140 கிலோமீற்றர் (87 மைல்) தொலைவில் நடந்ததாக கின்ரோஸ் செய்தித்தொடர்பாளர்உறுதிப்படுத்தினார்.

கனடாவைத் தளமாகக் கொண்ட கின்ரோஸ் நிறுவனத்தால் நடத்தப்படும் சிரானோ தங்கச் சுரங்கத்துக்குச் சென்று கொண்டிருந்த வெடிபொருள்களை ஏற்றிச் சென்ற ட்ரக்கின் கீழ் மோட்டார் சைக்கிள் சென்றபோது, ட்ரக் வெடித்து சிதறியது.

மீட்புப் பணிகள் நடைபெற்று வரும் நிலையில், பொதுமக்கள் தங்கள் பாதுகாப்பிற்காக அந்தப் பகுதியை விட்டு அருகிலுள்ள நகரங்களுக்குச் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.




# ஆப்கானில் தலிபான் தளபதி உட்பட 6 பேர் சுட்டுக் கொலை!

ஆப்கானிஸ்தானில் தலிபான் தளபதி, அவரது மகன் உள்ளிட்ட 6 பேர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர் எனத் தலிபான் அரசாங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கிழக்கு குனார் மாகாணம் - நரங் மாவட்டத்தில் நேற்று புதன்கிழமை இந்தப் படுகொலைச் சம்பவம் இடம்பெற்றது.

தனிப்பட்ட விரோதம் காரணமாகவே இந்த துப்பாக்கிச்சூடு நடைபெற்றுள்ளதாகத் தலிபான்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, திங்கட்கிழமை இடம்பெற்ற பிறிதொரு சம்பவத்தில் காஸெமி பகுதியில் ஒரு மருத்துவர் மற்றும் அவரது சாரதி ஆகியோர் காரிலேயே சுட்டுக்கொல்லப்பட்டனர். கடந்த வாரம், 25 வயது இளம் பெண் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். மகளின் இறப்புக்கு நீதி கேட்ட தந்தை கைது செய்யப்பட்டுள்ளார் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.





# தமிழகத்தில் நாளை முழு ஊரடங்கு அமுல் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

தமிழகத்தில் கொரோனாத் தொற்று பரவலைக் கட்டுப்படுத்த அரசு பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. கடந்த 7 ஆம் திகதி முதல் இரவுநேர ஊரடங்கும், ஞாயிற்றுக்கிழமைகளில் முழு ஊரடங்கும் அமல்படுத்தப்பட்டு வருகிறது.

பொதுமக்களின் நலன் கருதி பால் மற்றும் மருந்து உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகளுக்கு மட்டும் ஊரடங்கு நேரத்தில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக நாளை ஞாயிற்றுக்கிழமையும் முழு ஊரடங்கு அமுல்படுத்தப்படும் எனத் தமிழக அரசு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழ்நாட்டில் தற்போது கொரோனா - ஒமிக்ரோன் வைரஸ் நோய்த் தொற்று பரவல் அதிகரித்து வரும் சூழ்நிலையில், பொது மக்களின் நலன் கருதி தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் வகையில் எதிர்வரும் நாளை ஞாயிற்றுக்கிழமை முழு ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்படும்.

இந்த முழு ஊரடங்கு நாளில் கடந்த 16-1-2022 ஞாயிற்றுக்கிழமை அன்று முழு ஊரடங்கின் போது நடைமுறைப்படுத்தப்பட்ட அதே அத்தியாவசிய செயற்பாடுகள் அனுமதிக்கப்படும்; தடை செய்யப்பட்ட செயற்பாடுகளுக்கான தடைகள் தொடரும்.

மேலும், வெளியூர்களிலிருந்து வரும் பயணிகளின் நலன் கருதி, சென்னை சென்ட்ரல், எழும்பூர் ரயில் நிலையங்கள் மற்றும் கோயம்பேடு பஸ் நிலையம் போன்ற இடங்களில் வழக்கமான ஓட்டோக்கள், செயலி மூலம் முன்பதிவு செய்து இயக்கப்படும் வாடகைக் கார்கள் பயணிகளை ஏற்றிச் செல்ல அனுமதிக்கப்படும். மாவட்ட ரயில் நிலையங்களுக்கும் மற்றும் வெளியூர் பஸ் நிலையங்களுக்கும் இது பொருந்தும்.

கொரோனாத் தொற்றிலிருந்து மக்களைக் காத்திட அரசு மேற்கொள்ளும் நோய்த் தடுப்பு நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பு அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன் எனத் தெரிவித்துள்ளார்.

# இந்தியா கேட் பகுதியில் நேதாஜிக்கு சிலை மோடி அறிவிப்புக்கு குடும்பத்தினர் நன்றி

தலைநகர் டெல்லியில் உள்ள இந்தியா கேட் பகுதியில் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் சிலை நிறுவப்படும் என்று இந்தியப் பிரதமர் மோடி அறிவித்துள்ளார். பிரதமரின் இந்த அறிவிப்புக்கு, நேதாஜியின் மகள் அனிதா போஸ், பேரன்கள் சுகதா போஸ் மற்றும் சந்திரகுமார் போஸ் ஆகியோர் நன்றி தெரிவித்துள்ளனர்.

ஜெர்மனியில் வசித்துவரும் நேதாஜியின் மகள்அனிதாபோஸ்செய்திநிறுவனமொன்றுக்கு அளித்த பேட்டியில் -

இந்த முடிவு மகிழ்ச்சி அளிக்கிறது. இந்தியா கேட் என்ற முக்கியமான இடத்தில் சிலை வைப்பது எனக்கு உண்மையிலேயே மகிழ்ச்சி தான். திடீரென இந்த அறிவிப்பு வந்தது எனக்கு ஆச்சரியமாக உள்ளது. இதை முன்பே செய்திருக்கலாம். இருப்பினும், தாமதம் என்றாலும் சிறந்த முடிவு. இது ஓர் இனிய நல்லெண்ண நடவடிக்கை. இதன்மூலம், குடியரசு தின அணிவகுப்பில் மேற்கு வங்காள அரசின் அலங்கார ஊர்தி நிராகரிக்கப்பட்டது தொடர்பான சர்ச்சை முடிவுக்கு வரும் என்று நம்புகிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத்சிங் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், டெல்லி இந்தியா கேட் பகுதியில் நேதாஜி சிலையை நிறுவும் பிரதமர் மோடியின் அறிவிப்பை வரவேற்கிறேன். நன்றி உணர்வுள்ள நாடு, நேதாஜிக்கு அளிக்கும் மரியாதையாக இதைப் பார்க்க வேண்டும். நேதாஜி சிலை நிறுவுவதால், நாட்டு மக்கள் மனதில் தேசபக்தி, சுயமரியாதை போன்றவை தட்டி எழுப்பப்படும். சுதந்திரத்தைப் பராமரிக்க எல்லாவற்றையும் தியாகம் செய்யும் உணர்வையும் அளிக்கும். நேதாஜி சிலையை நிறுவுவதற்காக பிரதமருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன், - என்று அவர் கூறியுள்ளார்.





# பூஸ்டர் டோஸ் தடுப்பூசி செலுத்துதல் மத்திய சுகாதாரத்துறை அறிவுறுத்தல்

இந்தியா முழுவதும் கொரோனா பரவலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையின் அடுத்தகட்டமாக, 15 வயது முதல் 18 வயதுக்கு உட்பட்ட சிறார்களுக்கு தடுப்பூசி செலுத்தும் திட்டம் ஜனவரி மூன்றாம் திகதி முதல் செயற்பாட்டில் உள்ளது. 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு பூஸ்டர் டோஸ் தடுப்பூசி செலுத்தும் திட்டம் ஜனவரி 10 முதல் செயற்படுத்தப்படுகிறது.

முதல்கட்டமாக சுகாதாரத் துறை, பொலிஸ் உட்பட முன்கள பணியாளர்களுக்கு பூஸ்டர் தடுப்பூசி போடப்பட்டு வருகிறது. இரண்டாவது தவணை தடுப்பூசி போட்ட வர்கள் 9 மாதங்கள் கழித்து பூஸ்டர்டோஸ்போட்டுக் கொள்ளலாம் என்று இந்திய மத்திய சுகாதாரத்துறை தெரிவித்திருந்தது.

இந்த நிலையில், மத்திய சுகாதாரத்துறை அமைச்சகத்தின் கூடுதல் செயலாளர் விகாஸ் ஷீல், அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கும் அனுப்பியுள்ள கடிதத்தில், கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டு சிகிச்சைக்குப் பின் குணமடைந்தவர்களுக்கு, பூஸ்டர் டோஸ் உட்பட அனைத்துவித கொரோனாத் தடுப்பூசிகளையும் மூன்று மாதங்களுக்குப் பிறகே செலுத்த வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளார். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதனைக் கவனத்தில் கொள்ளுமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

அறிவியல் சான்றுகள் மற்றும் நோய்த்தடுப்புக்கான தேசிய தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் மத்திய சுகாதார அமைச்சகத்தின் கூடுதல் செயலாளர் விகாஸ் ஷீல் குறிப்பிட்டுள்ளார்.

# பிரபலமான தலைவர்களின் பட்டியல் இந்தியப் பிரதமர் மோடிக்கு முதலிடம்



உலகின் மிகப் பிரபலமான தலைவர்களின் பட்டியலை 'த மோர்னிங் கன்சல்ட்' என்ற நிறுவனம் வெளியிடுள்ளது. இந்தப் பட்டியலில் இந்தியப் பிரதமர் மோடி முதலிடம் பிடித்துள்ளார்.

த மோர்னிங் போஸ்ட் ஊடகத் தகவலின்படி, உலகில் மிகப் பிரபலமான தலைவர்கள் தரவரிசையில் இந்தியப் பிரதமர் மோடிக்கு 71 சதவீதம் பேர் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

மெக்சிகோவின் அதிபர் அன்ட்ரஸ் மனுவேல் லோபஸ் 66 சதவீதமானோரின் ஆதரவுடன் இரண்டாமிடத்தைப் பிடித்துள்ளார். அமெரிக்க அதிபர் ஜோ பைடன் 6 ஆவது இடத்திலும், பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜோன்சன் பட்டியலின் இறுதியில் 13 ஆவது இடத்திலும் உள்ளனர்.

த மோர்னிங் கன்சல்ட் கடந்த 2020 ஆம் ஆண்டு மே மாதம் நடத்திய கருத்துக் கணிப்பில், இந்தியப் பிரதமர் மோடிக்கு 84 சதவீத ஆதரவு கிடைத்தது. ஆயினும், கடந்த ஆண்டு மே மாதத்தில் 63 சதவீதமாக சரிந்து, தற்போது 71 ஆக அதிகரித்துள்ளது. ஜனவரி 13 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரையில் சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் இந்த தரவரிசை வெளியிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# மு.க.ஸ்டாலின் மீதான அவதூறு வழக்குகள் இரத்துச்செய்து உயர் நீதிமன்றம் உத்தரவு

தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மீது கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தொடரப்பட்ட 18 கிரிமினல் அவதூறு வழக்குகளை இரத்துச் செய்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

2016 முதல் 2021ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியின்போது அரசுக்கு எதிராகவும் அப்போதைய முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களுக்கு எதிராகவும் பேசியனார் என அவதூறு வழக்குகள் தொடரப்பட்டன. இது தொடர்பான வழக்கு நீதிபதி நிர்மல்குமார் முன் விசாரணைக்கு வந்தது.

கடந்த ஆட்சியில் அரசியல் கட்சி தலைவர்களுக்கு எதிராகத் தொடரப்பட்ட அனைத்து அவதூறு வழக்குகளையும் திரும்பப்பெறுவதாகப் பிறப்பிக்கப்பட்ட அரசாணை, தமிழக அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டது. அரசாணையை ஏற்ற நீதிபதி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்டோருக்கு எதிரான வழக்குகளை இரத்துச் செய்து உத்தரவிட்டார்.

# மக்களின் விவசாய பூர்வீக நிலங்களை கைப்பற்றுவதை உடனடியாக நிறுத்துக!

## சார்ள்ஸ் நிர்மலநாதன் வலியுறுத்தல்



முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்களின் விவசாய மற்றும் பூர்வீக நிலங்களாகவுள்ள 7091.64ஹெக்டேயர் நிலங்களைச் சுவீகரிக்கும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிட, வனவளத் திணைக்களம் முயற்சிப்பதாகத் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் சபையில்குற்றம்சாட்டியயுடன்இந்தநடவடிக்கையை உடனடியாக நிறுத்துமாறு வனசீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சர் சீ.பீ. ரத்நாயக்க விடம் கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற, ஜனாதிபதியின் கொள்கை விளக்கவுரை மீதான மூன்றாம் நாள் சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் உரையாற்றிய போதே இவ்வாறு கோரிக்கை விடுத்த அவர் மேலும் கூறுகையில், தெரிவித்தவை வருமாறு –

வனத் திணைக்களம் முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலங்களை அபகரிக்கின்ற முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது. குறிப்பாக வடக்கு, கிழக்கில் இருக்கின்ற நிலங்களைக் குறிவைத்து அரசும் வனத் திணைக்களமும் மோசமாக செயற்படுகின்றன.

இதன் ஒரு நடவடிக்கையாக வனவளத்திணைக்களத்தால் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் 2749.53 ஹெக்டேயரும் கரைத்துறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் 2275.61 ஹெக்டேயரும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில்1764.81ஹெக்டேயரும் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவில் 530.37 ஹெக்டேயரும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் 286.74 ஹெக்டேயரும் வெலிஓயா பிரதேசசெயலாளர்பிரிவில்14.95ஹெக்டேயரும் என மொத்தமாக 7091.64 ஹெக்டேயர் மக்களுடைய விவசாய நிலங்களை ,அவர்களின் பூர்விக நிலங்களை சுவீகரிக்க வர்த்தமானி அறிவித்தல் விட முயற்சி எடுக்கப்படுகின்றது.

எனவே இந்த முயற்சியை உடனடியாக நிறுத்த வேண்டுமென வனஜீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சர் சீ.பீ. ரத்நாயக்கவிடம் கோரிக்கை விடுக்கின்றேன். – என்றார்.



# கஞ்சாவுடன் தம்பதி கைது!

கஞ்சா போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் சுழிபுரத்தைச் சேர்ந்த தம்பதியர் கைது செய்யப்பட்டுள்ளனர்.


காங்கேசன்துறை பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழான மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவும் கடற்படையும் இணைந்து நேற்று (வெள்ளிக்கிழமை) நடத்திய தேடுதல் நடவடிக்கையில் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

மூன்று உரப்பைகளில் பொதியிடப்பட்ட நிலையில் சுமார் 85 கிலோ கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சுழிபுரம் பறாளை பகுதியில் உள்ள வீட்டு வளாகத்திலிருந்து கஞ்சா போதைப்பொருள் கைப்பற்றப்பட்ட நிலையில் 36 வயதுடைய கணவரும் அவருடைய மனைவியும் கைது செய்யப்பட்டனர் என்றும் பொலிஸார் கூறினர். சந்தேக நபர்கள் இருவரும் காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்பட்டுள்ளனர்.

# மாகாணசபைத் தேர்தல்கள் இந்த ஆண்டு நடத்தப்படும்

## அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா உறுதியளிப்பு



இந்த ஆண்டு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா தெரிவித்துள்ளார்.

விரைவில் தேர்தலை நடத்தி ஜனநாயக உரிமைகளை வெளிப்படுத்துவதற்கான தளத்தை மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்றும் அமைச்சர் உறுதியளித்தார்.

நேற்று (வெள்ளிக்கிழமை) நாடாளுமன்றத்தில் அரசாங்கத்தின் கொள்கை அறிக்கை மீதான ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

தேர்தல் சீர்திருத்தங்கள் தொடர்பான நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தின் போது நீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றதாக அவர் கூறினார்.

தேர்தல்கள் ஆணைக்குழு, சிவில் சமூக அமைப்புகள் மற்றும் அரசியல் கட்சிகள் குறிப்பிட்ட சில சரத்துக்களை உள்ளடக்குமாறு கோரியுள்ளன எனவும் அமைச்சர் குறிப்பிட் டார்.

மேலும் கடந்த சந்திப் பின் போது தேர்தல் செலவினங்களைக் குறைப்பது தொடர்பாகவும் கலந்துரை யாடப்பட்டதாகவும் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலை நடத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்.



# கலைஞர்களுக்கு எம்மால் வழங்கும் சிறந்த பரிசே காப்புறுதி - மஹிந்த

இலவசமாக வழங்கப்படும் மருத்துவ உதவி விபத்துக் காப்புறுதியானது கலைஞர்களுக்கு எம்மால் வழங்கக்கூடிய சிறந்த பரிசாகும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கலைஞர்களுக்கான காப்புறுதி பத்திரம் வழங்கல், தேசிய மரபுரிமைகள், அரங்குக் கலைகள் மற்றும் கிராமியக் கலைகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் உத்தியோகப்பூர்வ இணையத்தளம் மற்றும்கலைஞர்களுக்கானதரவுத்தளம் வெளியீட்டு விழா அலரி மாளிகையில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் கலந்துக் கொண்டு உரையாற்றுகையிலேயே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போதுபிரதமரின்தலைமையில் கலைஞர்களுக்கான காப்புறுதி பத்திரம் வழங்கப்பட்டது. பிரதமர், இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க, புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தன மற்றும் இராஜாங்க அமைச்சின் செயலாளர் நிசாந்தி ஜயசிங்க ஆகியோரும் காப்புறுதி பத்திரம் வழங்கும்நிகழ்வில்கலந்து கொண்டனர்.

சொஃப்ட்லொஜிக் காப்புறுதி நிறுவனத்தால் வழங்கப்படும் 50 காப்புறுதி பத்திரங்கள் கலைஞர்களுக்குக் குறியீட்டு ரீதியாக வழங்கிவைக்கப்பட்டது.

தேசிய மரபுரிமைகள், அரங்குக் கலைகள் மற்றும் கிராமியக் கலைகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் உத்தியோகப்பூர்வ இணையத்தளம் இதன்போது பிரதமரின் தலைமையில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

கலைஞர்களுக்கான தரவுத்தளம் வெளியிட்டு வைக்கப்பட்டு நடிகர் ரவீந்திரன்தெனிய மற்றும் நடனக் கலைஞர் கொடஹேவகே, இராஜாங்க அமைச்சர் கொடஹேவகே கிரென்டின் சில்வா ஆகியோரின்தரவுகள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்கவால் அங்கீகரிக்கப்பட்டு தரவுத்தளத்தில் உள்ளடக்கப்பட்டது.

கலைஞர்களுக்கான இலவச காப்புறுதி வழங்கல் மற்றும் அனைத்துக் கலைஞர்களுக்குமான தரவுத்தளத்தை ஆரம்பித்தல் ஆகியன தொடர்பில் பிரதமர் உள்ளிட்ட அரசாங்கத்துக்கு பல கலைஞர்கள் பாராட்டுத் தெரிவித்தனர்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

கலாசார பாரம்பரியம் நிறைந்த பெருமைமிக்க வரலாற்றை நமது நாடு கொண்டுள்ளது. உங்களைப் போன்ற கலைஞர்களின் படைப்புகளால் இந்த வரலாறு வண்ணமயமானது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. ஒரு தேசமாக நாம் இன்னும் உலகின் முன் ஒரு சிறந்த கலாசாரத்துக்கு உரிமை கோரும் ஒரு தேசமாகும்.

இலக்கியம், நடனம், நாடகம், கலை, பொம்மலாட்டம், சிற்பம், இசை மற்றும் சினிமா ஆகியவற்றின் மூலம் சமூக யதார்த்தத்தை ஆக்கப்பூர்வமாக மக்களிடம் கொண்டுசெல்ல கலைஞர்கள் பெரும் முயற்சி செய்கிறார்கள். அந்த முயற்சியை மக்கள் இன்னும் ரசிக்கிறார்கள்.

நம் நாட்டின் கலைஞர்கள் தங்கள் முழு வாழ்க்கையையும் தங்கள் கலைக்காக அர்ப்பணிக்கிறார்கள். அவர்கள் பணிபுரியும் துறையை மதிக்கிறார்கள். அத்துடன் அன்பு செலுத்துகின்றனர். அவர்கள் தங்கள் பொருளாதாரத்தை விட கலைக்கு மதிப்பளித்தனர்.

அதனாலேயே அரசாங்கத்தினால் காப்புறுதி கட்டணங்கள் செலுத்தப்படும் பிரேஷாகாப்புறுதித்திட்டத்தைவரலாற்றில் முதல் முறையாக எம்மால் அறிமுகப்படுத்த முடிந்தது. அன்று நாடகத் துறைக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்த மருத்துவ உதவி விபத்து காப்புறுதி, இன்று அனைத்துக் கலைஞர் களுக்குமானஒருமாபெரும்படியாக மாறியுள்ளது.

எங்கள் அன்பிற்குரிய கலைஞர்களுக்கு இலவசமாக வழங்கப்படும் இந்த காப்புறுதியானது, கலைஞர்களுக்கு எம்மால் வழங்கக்கூடிய சிறந்த பரிசு என்று நாங்கள் நம்புகிறோம். – என்றார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.01.2022இல் வெளியிடப்பெற்றது.